## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

| OS.No. | 118/2022 |
|---|---|

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆம் நாள் புதன் கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின்படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ரவிச்சந்திரன் | **சமயம்** | : | -- |
| **த/பெ.** | : | தங்க நாடார் | **வயது** | : | 58 |
| **கிராமம்** | : | -- | **தொழில்** | : | -- |
| **வட்டம்** | : | -- | | | |

**பி.வா.சா.1: முதன்மை விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். மனுவின் அடிப்படையில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| நீ.ம.சா.ஆ. | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| 1 | -- | ஆணையர் அறிக்கை | அசல் |
| 2 | -- | ஆணையர் வரைபடம் | அசல் |
| 3 | -- | சர்வேயர் வரைபடம் ( எண்ணம் - 2) | அசல் |

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:25:09 +0530

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். ஆணையர் அறிக்கைக்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட சர்வேயர் வரைபடமான நீ.மா.சா.3 ல் சர்வே எண். 1214 க்கு வேறு பாதை இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் ஆணையர் வழக்கு சொத்துக்களை அளவீடு செய்யும் போது பிராது 3 ம் தபசில் சொத்தான பாதை வழியாக சென்று தான் அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கை குறைபாடு உடையது என்றும், அதனால் அதை முழுமையாக ஏற்க இயலாது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:25:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.